ஜளுக்கும் எவ்வளவு தொகை செலவாகும் என்ற தோரா3 மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது ஆரம்பக் கட்டத்தில் அதன் கடைக்கோடிப் பகுதியில் வேலை செய்ய வேண்டுமென்று, ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு, அந்த திட்ட மதிப்பீடுகளைப் பற்றிச் சொல்ல முடியும்.

முதுகுளத்தூர் தொகுதியை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவிக்கும் திட்டம்

*வினா எண். 103 திரு. கே. தனுக்கோடித் தேவர்:— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதுகுளத்தூர் தொகுதியை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவித்து நிவாரணப் பணிகள் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் மாவட்டம், ஏற்கனவே மத்திய மாநில அரசுகளின் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் (Drought Prone Area Programme) சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது நிலவும் வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான நிவாரணப் பணிகளை அரசு செய்து வருகிறது.

திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் கேட்டிருக்கிற கேள்வி, முகவை மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியைப் பற்றியதாகும். ஆனால் அமைச்சர் அவர்கள் மொத்த மாவட்டத்தைப் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். முகவை மாவட்டத்தில் முதுகுளத்தூர் தொகுதியும், கடலாடித் தொகுதியும் மிக மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. எனவே அவைகளை மற்ற தொகுதிகளோடு ஒப்பிடாமல், நிரந்தரமான தொழில் துறைகளை, மற்றும் ஆலைகள் போன்றவற்றை அங்கே ஏற்படுத்தி, அங்குள்ள மக்கள் இயற்கையையே நம்பிக் கொண்டிராமல், நிரந்தரமான ஒரு வாழ்க்கையை அந்த வறட்சிப் பகுதிகளிலே ஏற்படுத்தித் தரவேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: முதுகுளத்தூரும் இராமநாதபுரம் மாவட்டத்திலேதான் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் வறட்சிப் பகுதிகளாக எடுத்துக் கொள்ளும் போது முதுகுளத்தூரும் அதிலே வந்துவிடும்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: இன்றைக்கு மற்றத் தொகுதிகளில் நீர் வளம் இருக்கிறது, தொழில் வளம் இருக்கிறது. முதுகுளத்தூர் தொகுதியில் நீர் வளம் இல்லை. தொழில் வளம் இல்லை. அங்கு வாழ்கின்ற மக்கள் இயற்கையை நம்பி வாழ்கிற காரணத்தால் அதற்கு விதிவிலக்கு அளித்து வளர்ச்சித் திட்டங்களைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் பூராவுக்கும் விதிவிலக்கு அளித்து எடுத்துக் கொள்கிறபோது முதுகுளத்தூரும் அதிலே வந்துவிடுகிறது. அப்போது முதுகுளத்தூர் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பெற்று 30 இலட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. கிணறுகள் ஆழப்படுத்துவது, சாலைகள் அமைப்பது, ஊருணிகளைச் செப்பனிடுவது, பெரிய ஏரிகளை வெட்டுவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டம் முழுவதற்குமாக ஆறு கோடி நாற்பத்தோரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: கிழக்கு முகவை மாவட்டத்தில் ஓராண்டு விட்டு ஓராண்டு வறட்சி ஏற்பட்டு வருவது அரசுக்குத் தெரியும். இப்போது குடிதண்ணீர் லாரிகளின் மூலம் ஊர் மக்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ஆறு கோடி ரூபாய் செலவழிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிரந்தரமாக கிழக்கு முகவை மாவட்டத்திற்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வைகையாற்றிலிருந்து தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதற்காகத்தான் இராமநாதபுரம் மாவட்டம் ட்ரவுட் ப்ரோன் ஏரியா புரோகிராமில் சேர்க்கப்பட்டு குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்க பணம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. க. பாரமலை: நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் டி. பி. ஏ. பி. திட்டம் பற்றி சொன்னார்கள். அது நடைபெற்று வருகிறது; அதற்காக நன்றி. கிழக்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரை ஒன்று வறட்சியாகப் போய்விடுகிறது அல்லது வெள்ளம் வந்து வெள்ள நிவாரணம் பணிகள் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இயற்கையினால் ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகிற அந்த மாவட்டத்தில் நிரந்தரமாக வறட்சிப் பணிகளைத் தொடர்ந்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தேவையான அளவுக்கு வறட்சிப் பணிகள் மேற்கொள்ளப் பெற்று செயல்படுத்தப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் இராமநாதபுரம் மாவட்டம் இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்படுகிற மாவட்டம், வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டம் என்று அறிவித்து பல காரியங்களைச் செய்திருந்தாலும் கூட ஆண்டுதோறும் தொடர்ந்து இந்த நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன. இதை மனதில் கொண்டு நிரந்தரமாக இந்த மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கு வழிவகைகள் செய்யும் வகையில் மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து கிடைக்கும் தண்ணீரைத் திருப்பிவிடுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்

செய்து தருவதோடு மத்திய சர்க்கார் மூலம் நடத்தப்படுகிற பெரும் தொழில்களை இந்த பிற்பட்ட பகுதியில் தொடங்கவும் அதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்கான உதவிகளைச் செய்யவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வறட்சியான பகுதி, பின்தங்கிய பகுதி என்று கருதி மாநில அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து நிரந்தரமான வளர்ச்சிப் பணிகளைச் செய்ய திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வருகிறது.

பெரிய கிராமங்களுக்கு கூடுதல் தலையாரிகள் நியமிக்கும் திட்டம்.

*வின எண். 104 திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாக் கிராமங்களிலும் மூன்று தலையாரிகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளதா?

(ஆ) பெரிய கிராமங்களுக்குக் கூடுதல் தலையாரிகள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): முன்னாள் வருவாய் வாரியத்தின் நடவடிக்கைகளின்படி 4,500 க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு மூன்று கிராமக் காவலர்கள் வரையிலும் நியமிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. 3 பேர்களுக்கு மேல் நியமிக்கக்கூடாது என்று உத்திரவு போடப்படவில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பல கிராமங்களைப் பார்வையிட வேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தினால் பொதுமக்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இன்னும் அதிகமான அளவில் கிராம அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நிரந்தரமான கிராம அதிகாரிகளைப் போடுவதற்கு இன்றைக்கு அரசு திட்டங்களைப் போட்டு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : கிராம அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டபோது அரசுக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்த நேரத்திலே எல்லாம் தலையாரிகள் அரசுக்கு ஆதரவாக இருந்தார்கள். அவர்களுக்கு வெகுமதியாக அவர்களில் வயதானவர்கள் என்று சொல்லி ஒரு தாலுக்காவுக்கு 50 பேர்கள் வீதம் பணி